# அவுஸ்திரேலியா

# தமிழ்மொழித் தேர்வு

**Reading Time: 15 Minutes**
**Writing Time: 90 Minutes**

# வளர்நிலை 8

## அரை ஆண்டுத் தேர்வு
## 2006

சுட்டெண் **(Index) :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

தமிழ் மொழி

அரையாண்டுத் தேர்வு வகுப்பு 08 15-07-06

பன்முகத்தேர்வு பகுதி 1 வருடம்: 08

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | இயல், இசை, நாடகம் என்பது<br>முத்தமிழ் 2. செந்தமிழ் 3. பைந்தமிழ் 4. நல்தமிழ் | 1 | 2 | 3 | 4 |
| 2 | மனிதரின் பண்பாட்டை எடுத்துக் காட்டுவது<br>1.உணவு 2. கலாச்சாரம் 3. உடை 4. கலை | 1 | 2 | 3 | 4 |
| 3 | பின்வருவனவற்றில் உயிருள்ள பொருள் எது?<br>1.கடல் 2. மனிதன் 3. கல் 4. மண் | 1 | 2 | 3 | 4 |
| 4 | **தோழன்** என்ற சொல்லின் எதிர்ப்பாற்சொல்<br>1. பாடகி 2. நண்பி 3. இறைவி 4. தோழி | 1 | 2 | 3 | 4 |
| 5 | தமிழ் பேசும் மக்கள் -------<br>1. நாகர் 2. ஆரியர் 3. தமிழர் 4. சிங்களவர் | 1 | 2 | 3 | 4 |
| 6 | வெறுப்பு என்பதன் எதிர்ச்சொல் என்ன?<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 7 | கிழவன் என்பதன் எதிர்ப்பால் சொல் எது?<br>1. தங்கை 2. கிழவி 3. சித்தி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8 | நான் பாட்டு பாடுகிறேன். இதில் வினைச்சொல்<br>1.பாடுகிறேன். 2. பாட்டு. 3.பாடுவேன் 4. நான் | 1 | 2 | 3 | 4 |
| 9. | கிறிஸ்மஸ் என்பது.<br>1. தீபாவளி 2. தைப்பொங்கல்<br>3. நவராத்திரி 4. நத்தார் | 1 | 2 | 3 | 4 |
| 10. | பிறந்தநாட்டின் எதிர்கால வாரிசுகள் என்பது<br>1. மாதா 2. குழந்தைகள் 3. பெரியோர் 4.பெண்கள் | 1 | 2 | 3 | 4 |
| 11. | சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா என்று பாடியவர்<br>1. வள்ளுவர் 2. பாரதியார்<br>3. ஔவையார் 4. ஆதித்தனார் | 1 | 2 | 3 | 4 |
| 12. | சேவல் ---------. காகம் கரையும்.<br>1. கூவும் 2. கத்தும் 3. பேசும் 4. அகவும் | 1 | 2 | 3 | 4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | பள்ளம் என்பதன் எதிர் சொல்.<br>1. மேடு 2. உயர்வு 3. இறக்கம் 4. தாழ்வு | 1 | 2 | 3 | 4 |
| 14. | தோன்றுதல் இதன் எதிர்ச்சொல்<br>1. மறைதல் 2. உதிப்பு 3. இறப்பு 4. தோன்று | 1 | 2 | 3 | 4 |
| 15 | அழு என்பதை எதிர்மறையில் எழுதினால்.<br>1. இருந்தாய் 2. இருக்காதே 3. அழாதே 4. நில் | 1 | 2 | 3 | 4 |
| 16 | பாம்பின் இளமைப் பெயர்<br>1. குட்டி 2. கன்று 3. பிள்ளை 4. குஞ்சு | 1 | 2 | 3 | 4 |
| 17. | அந்த மாடுகள் நடந்து ------------.<br>1. விழுந்தன 2. விழுந்தது<br>3. ஓடியது. 4. சென்றன. | 1 | 2 | 3 | 4 |
| 18. | திருவிழாவில் கொட்டப்படும் முரசு<br>1.மேளம் 2. போர்முரசு 3. தவில் 4. மத்தளம் | 1 | 2 | 3 | 4 |
| 19. | தலைவனின் எதிர்ப்பால் சொல்<br>1. தலைவி 2. சிறுமி 3. மாணவி 4. பாடகி | 1 | 2 | 3 | 4 |
| 20. | சைக்கிள் என்பது.<br>1. புகைவண்டி 2. கார்<br>3.பஸ் வண்டி 4. துவிச்சக்கர வண்டி | 1 | 2 | 3 | 4 |
| 21 | தமிழர் புதுவருடம் கொண்டாடும் மாதம் எது?<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22 | அவள் கல கல என சிரித்தாள் .கலகல என்பது<br>1. மரபுச்சொல் 2. அடுக்குமொழி<br>3. வினைசொல் 4. தொடர்மொழி | 1 | 2 | 3 | 4 |
| 23 | மழைக்கால மேகத்தை இப்படி அழைப்பர்<br>1. முகில் 2. மேகம். 3. கார்முகில் 4. மழை. | 1 | 2 | 3 | 4 |
| 24 | பொன்நிறம் பிரித்து எழுதினால்<br>1. பொன்+ நிறம் 2. பொண் + நிறம்<br>3. பொண்மை + நிறம் 4. பொ + நிறம் | 1 | 2 | 3 | 4 |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | நாய் குரைக்கும். நரி<br>1. கர்ச்சிக்கும் 2 . முழங்கும் 3. ஊளையிடும்<br>2. 4. சீறும் | 1 | 2 | 3 | 4 |
| 26 | இசையாலும் நடிப்பாலும் கருத்துக்களை விளக்குவது<br>1. இசை 2. பாடல் 3. நாடகம் 4. சங்கம் | 1 | 2 | 3 | 4 |
| 27 | விருந்தினரை வரவேற்பது<br>1. வீரம் 2. மானம் 3. இன்பம் 4. விருந்தோம்பல் | 1 | 2 | 3 | 4 |
| 28 | இயற்கை எதிர்ச்சொல் --------------<br>1. உண்மை 2. செயற்கை 3. மகிழ்ச்சி 4. துன்பம் | 1 | 2 | 3 | 4 |
| 29 | ஒரு பதிலுக்கு உரிய கேள்வி வசனம் என்ன?<br>1. எனக்கு 13 வயது 2. உன் பெயர் என்ன?<br>3. நான் பாடுவேன் 4. எனக்கு பாட விருப்பம் | 1 | 2 | 3 | 4 |
| 30 | யாருக்கும் பணியாத வீரப் பெண்<br>1. மூடப்பெண், 2. அடிமைப்பெண்<br>3.இளம்பெண், 4. புதுமைப்பெண் | 1 | 2 | 3 | 4 |

(30 புள்ளிகள்)

## வினாக்கள் பகுதி 2 வருடம்: 08

1. அமுதாவும் அவள் குடும்பத்தினரும் பாடசாலை விடுமுறைக்கு இந்தியாவுக்கு சென்றார்கள். அங்கு தங்கள் உறவினர் வீட்டில் நிற்பதற்கு அந்த உறவினர் வாழும் கிராமத்திற்கு சென்றார்கள். அது நகரத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்தது. எனவே ஒரு மோட்டார் வாகனம் ஒன்றில் பிரயாணம் செய்தார்கள். அங்கு போகும் பாதை மிகவும் நீண்டது. வழியில் பெரியபெரிய மரங்கள் சாலையோரமாக நின்றன. பாதை முழுவதும் பச்சை பசேலென்று இருந்தது. போகும் வழியில் நெல்வயல்கள் எல்லாம் எதிர்ப்பட்டன. பார்த்து ரசித்துக் கொண்டு சென்றார்கள். வழியில் தென்பட்ட சிறிய கூரை வீடுகளை பார்த்தார்கள். அங்குள்ள மக்கள் இவர்கள் வரும் வாகனத்தைக் கண்டதும் நின்று பார்த்தார்கள். அமுதாவும் குடும்பத்தினரும் வாகனத்தை நிறுத்தி அவர்களுடன் கலந்துரையாடினார்கள். அவர்களும் மிகவும் அன்பாக பழகினார்கள். அவர்கள் உறவினர் வீட்டை அடைந்ததும், குளித்து, உணவுண்டு ஆறுதாக அந்தக் கிராமத்தை சுற்றிப் பார்க்க கிளம்பினார்கள்.

இந்தியாவுக்கு சென்றது யார்?

__________________________________________________

அங்கு எங்கு தங்கினார்கள்?

__________________________________________________

கிராமத்துக்கு செல்ல எதில் புறப்பட்டார்கள்?

__________________________________________________

போகும் வழியில் என்ன பார்த்தார்கள்?

__________________________________________________

யாருடன் கலந்துரையாடினார்கள்?

__________________________________________________

(10 புள்ளிகள்)

2. தமிழ்மொழி பயில்வதால் ஏற்படும் நன்மைகள் 5 தருக

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

(10 புள்ளிகள்)

3.பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்க

தேர்த்திருவிழா

______________________________________________

பண்பாடு

______________________________________________

தீவிபத்து

______________________________________________

இலையுதிர்காலம்

______________________________________________

தொலைபேசி

______________________________________________

(10 புள்ளிகள்)

4. உமது பாடசாலையிலிருந்து திரும்பி நடந்து வரும் வழியில் ஒரு வங்கிக் கணக்குப் புத்தகம் கீழே கிடக்கிறது. அதனை எடுத்த நீர் பிறகு எடுக்கும் 5 நடவடிக்கைகள் என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

**5. கீழே உள்ள உரைப்பகுதியை வாசித்து அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க.**

திமிங்கலம் கடலில் வாழும் பிராணிகளில் மிகவும் பெரியது. இது மிகவும் ஆழமான பகுதிகளில் ஆழ்கடலில் வாழும். திமிங்கலம் மீன் இனத்தைச் சேர்ந்தது அல்ல. அவை மீனைப்போல் நீந்திச் செல்லும். ஆனால் அது மீன் இனம் இல்லை. அது குட்டி போட்டுப் பால் கொடுக்கும். எனவே திமிங்கலம் ஒரு முலையூட்டி என்பார்கள். ஆனால் மீனினம் முட்டை போடும். திமிங்கலம் ஒரு காலத்தில் நிலத்தில் வாழ்ந்தது என்று கூறுகிறார்கள். திமிங்கலம் அடிக்கடி நீருக்கு மேலே வரும். அப்போது அது மூச்சு விடும். திமிங்கலம் கூட்டமாக வாழும். அது பார்க்கவே பயங்கரமாக இருக்கும். ஆனால் சிலர் அவற்றைப் பழக்கி பலவிதமான வித்தைகளை செய்யப் பயிற்சி அளிக்கின்றார்கள்.

(10 புள்ளிகள்)

**6. மாறி இருக்கும் சொற்களை மாற்றி, சரியான வசனமாக எழுதுக.**

அவர்கள்- வாழ்கிறார்கள் - மகிழ்ச்சியுடன் - மிகவும்

மாணவர்கள் - தொழில் நுட்ப - பயில்கிறார்கள் - திறமையாக - கல்வி

கங்காரு - விலங்கு - என்னும் - மட்டும் - அவுஸ்திரேலியாவில் - காணப்படுகிறது

பல - மக்கள் - இன - பல - வாழ்கிறார்கள் -கலாச்சாரங்களுடன்

_______________________________________________

அடுக்குமாடி - பல - வீடுகளில் - மக்கள் - வசிக்கிறார்கள்

_______________________________________________

(10 புள்ளிகள்)

7. செப்டெம்பர் 11 பற்றி நீர் அறிந்தவற்றை 150 சொற்களுக்கு குறையாமல் வசனங்களில் எழுதுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(10 புள்ளிகள்)